# ஏப்ரல் - 07 - வெள்ளி

**புனித யோன் பப்ரிஸ்ற் சலேசியார்**

**“நான் என் தந்தைக்குரிய செயல்களைச் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்ப வேண்டாம். ஆனால் நான் அவற்றைச் செய்தால், என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள்”. யோவா. 10:37,38**

## முதல் வாசகம்: ஏரெமியா 20: 10 – 13

சுற்றிலும் ஒரே திகில்!” என்று பலரும் பேசிக் கொள்கின்றார்கள்” பழிசுமத்துங்கள் வாருங்கள், அவன்மேல் பழி சுமத்துவோம்” என்கிறார்கள். என் நண்பர்கள்கூட என் வீழ்ச்சிக்காகக் காத்திருக்கிறார்கள் ”ஒருவேளை அவன் மயங்கிவிடுவான் நாம் அவன்மேல் வெற்றி கொண்டு அவனைப் பழி தீர்த்துக் கொள்ளலாம்” என்கிறார்கள். ஆனால், ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப் போல என்னோடு இருக்கிறார். எனவே என்னைத் துன்புறுத்துவோர் இடறி விழுவர். அவர்கள் வெற்றிகொள்ள மாட்டார்கள். அவர்கள் விவேகத்தோடு செயல்படவில்லை அவர்களின் அவமானம் என்றும் நிலைத்திருக்கும் அது மறக்கப்படாது. படைகளின் ஆண்டவரே! நேர்மையாளரை சோதித்தறிபவரும் உள்ளுணர்வுகளையும் இதயச் சிந்தனைகளையும் அறிபவரும் நீரே நீர் என் எதிரிகளைப் பழி வாங்குவதை நான் காணவேண்டும் ஏனெனில், என் வழக்கை உம்மிடம் எடுத்துரைத்துள்ளேன். ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள் அவரைப் புகழ்ந்தேத்துங்கள் ஏனெனில், அவர் வறியோரின் உயிரைத் தீயோரின் பிடியினின்று விடுவித்தார்.

**பதில்பாடல் :** என் நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன்

## நற்செய்தி : யோவான் 10 : 31- 42

அக்காலத்தில் இயேசு மேல் எறிய யூதர்கள் மீண்டும் கற்களை எடுத்தனர்.இயேசு அவர்களைப் பார்த்து, ”தந்தையின் சொற்படி பல நற்செயல்களை உங்கள் முன் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள் எச்செயலுக்காக என்மேல் கல்லெறியப் பார்க்கிறீர்கள்?” என்று கேட்டார்.யூதர்கள் மறுமொழியாக, ”நற்செயல்களுக்காக அல்ல, இறைவனைப் பழித்துரைத்ததற்காகவே உன்மேல் கல்லெறிகிறோம். ஏனெனில் மனிதானாகிய நீ உன்னையே கடவுளாக்கிக் கொள்கிறாய்” என்றார்கள்.இயேசு அவர்களைப் பார்த்து, ””நீங்கள் தெய்வங்கள் என நான் கூறினேன்” என்று உங்கள் மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா?கடவுளுடைய வார்த்தையைப் பெற்றக் கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள். மறைநூல் வாக்கு என்றும் அழியாது.அப்படியானால் தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை ” இறை மகன் ”என்று சொல்லிக் கொண்டதற்காக ”இறைவனைப் பழித்துரைக்கிறாய்” என நீங்கள் எப்படிச் சொல்லலாம்?நான் என் தந்தைக்குரிய செயல்களைச் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்ப வேண்டாம்.ஆனால் நான் அவற்றைச் செய்தால், என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள் அதன்மூலம் தந்தை என்னுள்ளும் நான் அவருள்ளும் இருப்பதை அறிந்துணர்வீர்கள்” என்றார்.இதைக் கேட்டு அவர்கள் அவரை மீண்டும் பிடிக்க முயன்றார்கள். ஆனால் அவர்கள் கையில் அகப்படாமல் அவர் அங்கிருந்து சென்றார்.யோர்தானுக்கு அப்பால் யோவான் முதலில் திருமுழுக்குக் கொடுத்துவந்த இடத்திற்கு இயேசு மீண்டும் சென்று அங்குத் தங்கினார்.பலர் அவரிடம் வந்தனர். அவர்கள், ”யோவான் அரும் அடையாளம் எதையும் செய்யவில்லை ஆனால் அவர் இவரைப்பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையாயிற்று” எனப் பேசிக்கொண்டனர்.அங்கே பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம் :** “நன்மைக்குக் காலமில்லை”. எத்தனை தடவைகள் நாம் சலிப்போடு உச்சரிக்க நேர்ந்திருக்கிறது. “உண்மையைச் சொன்னால், நன்மையைச் செய்தால் துன்பம் தானே பரிசு”. என்று எத்தனை தடவைகள் நாம் நன்மை செய்ய எத்தனிக்காமலே இருந்திருக்கின்றோம். அவை ஒருபுறமிருக்க, நமக்குப் பிடிக்கவில்லை, நம்மோடு ஒத்துவரவில்லை, நம்மைச் சார்ந்தவரில்லை என்ற காரணங்களைக் காட்டி எத்தனை நன்மையான காரியங்களை நாம் எதிர்த்திருக்கின்றோம்? தவிர்த்திருக்கின்றோம்? தட்டிக் கழித்திருக்கின்றோம்? இந்த மனநிலை ஆதாமையும், ஏவாளையும் ஏமாற்றி இவ்வுலகத்தில் சாத்தான் தன் ஆட்சியை நிறுவிக்கொண்ட நாள்முதல் இறைவாக்கினர் எரேமியா காலத்திலும், இறைமகன் இயேசுவின் காலத்திலும், ஏன் இன்றும் தொடர்வது உண்மையாயினும், அந்தத் தீயவனின் ஆட்சியை முறியடித்து, நன்மையை நிலைநாட்ட வந்த இறைமகன் இயேசு, தம் தந்தையின் செயல்கள் எத்தகையது என்பதையும், பகைவனாம் சாத்தானின் செயல்கள் எவையென்றும் முதலில் இனம் கண்டுகொள்ள இன்று நம்மை அழைக்கின்றார்.

இயேசுவின் நற்போதனைகள், நற்செயல்கள் வழியாக அவரை இனம் கண்டுகொண்ட நாம், அவரே இறைமகன் என்பதை விசுவசிக்கவும், அவர் வழியில் நற்செயல்கள் புரிவதில் தயக்கம் களைந்திடவும் இறைவனை இறைஞ்சுவோமாக